# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

*** எல்லா வினாக்களுக்குக்கும் விடை தருக**

01. மதியினிற் புலை நாத்திகம் கூறுவர். இங்கு **புலை** என்பதன் ஒத்தசொல்

1. கொலை  2. இழிவு  3. அருவருப்பு  4. பேதம்

02. வானமுட்ட ஏலேலோ நிற்கிறானே. இங்கு **வானம்** என்பதன் ஒத்தசொல்

1. விசும்பு  2. அடவி  3. கொண்டல்  4. பவனம்

03. பிரிவின் கண் பீழை தருவது ஒன்று இல். இங்கு **பீழை** என்பதன் எதிர்ப்பதம்

1. துன்பம்  2. சேர்தல்  3. வெட்கம்  4. இன்பம்

04. காதலிக்கு இன்னொருவரிடத்தில் மையல் ஏற்படுகிறது. இங்கு **மையல்** என்பதன் எதிர்ப்பதம்.

1. கலக்கம்  2. தெளிவு  3. சோர்வு  4. மயக்கம்

05. கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர். இங்கு தட்டிய என்பது

1. கிடைக்காத  2. பெய்யாத  3. அற்றுப்போன  4. குறைந்துபோன

06. **பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி**

1. இயக்குனர்கள், நடிகர்கள், பாடலாசிரியர்கள்
2. நடனம், இசை, சினிமா
3. மயங்கித்தெளிதல், இருண்டுதெளிதல், காட்சி மாறுவது (Cut)
4. மேடை, அரங்கு, களரி

07. **தொடர்பற்ற சொற்களின் இணைவு**

1. துறை – செய்தி  2. திணை – நிலம்
3. தலைவி - தோழி  4. பரத்தை – கணிகை

08. ‘‘**யாண்டு** தேர் செலுமாங்கு’’
‘‘அளிதோ தானே **யாண்டு**ண்டு கொல்லோ’’
இங்கு **யாண்டு** என்னும் சொல் உணர்த்தும் பொருள்

1. ஆண்டு  2. மருங்கு  3. உருண்டு  4. எங்கு

09. பம்லெற் (pamphlet) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல் சொல்.

1. துண்டுப்பிரசுரம்  2. அறிக்கை  3. கட்டமைவு  4. முகவுரை

10. கூட்டத்தைக் குறித்த ‘திரள்’ என்ற மரபுப்பெயருக்குப் பொருந்தாதது

1. சனம்  2. முகில்  3. சேனை  4. உடு

11. வெட்டவெளி என்ற அடுக்குத் தொடர் தரும் பொருள்

1. திறந்தவெளி  2. வெளிவெளி  3. பெரும்வெளி  4. பெரிய வெளி



kalvi.lk

12. சீவனத்தைக் கெடுத்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்

1. விழலுக்கிறைத்தல் 2. கண்மூடித்தனம் 3. தட்டிக்கழித்தல் 4. வயிற்றிலடித்தல்

13. நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். இங்கு **புராணம்** என்பது குறிக்கும் கருத்து யாது?

1. வேதவாக்கிய பொருளை உணர்த்தும் நூல்
2. இல்லாததையும் சேர்த்து கவிபுனைந்து பாடப்பட்ட இலக்கியம்
3. பௌராணிகர் சுவைபட பாடும் இலக்கியம்
4. நவீனம் அல்லாதனவற்றைக் கூறும் நூல்

14. வேலையை முடித்து கைகளைத் தூக்கி நாரியை நிமிர்த்திய போது மின்சாரம் நின்று விட்டது. இங்கு **நாரியை நிமிர்த்துதல்** என்ற மரபுத்தொடர் தரும் கருத்து

1. நிலையாக நிற்றல் 2. ஓய்வெடுத்தல் 3. அவதானித்தல் 4. முடிவெடுத்தல்

15. சபாமண்டபத்திலே அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ வீற்றிருக்கும் இடம்

1. பொதுவியல் 2. ஓம்படை 3. ஓலக்கம் 4. நிந்தகம்

16. இலட்சங் கோடி அளவுடைய நிதி

1. சங்கநிதி 2. பதுமநிதி 3. சனநிதி 4. பணநிதி

17. சிறப்பு மிகுந்த ஒன்றுக்காக முயற்சிக்கத் தேவையில்லை. என்ற கருத்துத் தரும் பழமொழி

1. கனிந்த பழம் தானே வழும்
2. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
3. கனவிற் கண்ட பணம் செலவிற்கு உதவாது
4. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை

18. தர்மம் தலை காக்கும் என்ற பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது

1. பாரமபரை தர்மத்தாலேயே வாழும்
2. உயிர் வாழ்க்கைக்கு தர்மம் அவசியம்
3. ஒவ்வொருவரும் தர்மம் செய்தல் வேண்டும்
4. தர்மத்தைக் காப்பது தலை

19. 'கற்றோர் கல்லாதோர் எனப்பாராது'' என்ற கருத்தைக் கொண்டமைந்த அருஞ்சொற்றொடர்

1. கூடிக்குலாவி 2. பட்டிதொட்டி எங்கும்
3. மாடமாளிகை கூடகோபுரம் 4. வாழையடி வாழையாக

20. எடுத்துக் கொண்ட படைப்பை பருப்பொருளாக முன்னிறுத்தி அணுகவேண்டியதாக அமைவது

1. விளக்கம் 2. திறனாய்வு 3. மதிப்பீடு 4. விமரிசனம்

**∗ பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. "கணிப்பொறியின் நெற்றியில் ஒரு குங்குமம் வைத்தாள் என் மனைவி'' இங்கு **தற்சமமாக** அமைந்த சொல்

1. பொறி 2. நெற்றி 3. குங்குமம் 4. பொட்டு



kalvi.lk

22. இராமனைப் பிரியாதவனாகிய இலக்குவனைப் பெற்ற பெரியாள். இங்கு **பெரியாள்** என்பது.

1. குறிப்பு வினைப் பகுபதம்
2. தொழிற் பெயர்ப் பகுபதம்
3. தெரிநிலை வினைப் பகுபதம்
4. பண்புப்பெயர்ப் பகுபதம்

23. இடைநிலை பெற்றமையாத பெயர்ப்பகுபதம்.

1. ஓதுவான்
2. நடவான்
3. அறிஞன்
4. கூத்தன்

24. பின்வருவனவற்றில் தனிப்பெயரடை யாது

1. நல்ல
2. மெதுவாக
3. இன்று
4. நாளை

25. "பாற்பானை பொங்கவேண்டும்" என்பதில் **பாற்பானை** என்பது

1. தோன்றல் புணர்ச்சி
2. கெடுதல் புணர்ச்சி
3. திரிதல் புணர்ச்சி
4. இயல்புப் புணர்ச்சி

26. பின்வருவனவற்றில் வியங்கோள் வினை

1. நில்லாதீர்
2. பொழியட்டும்
3. கட்டுவித்தான்
4. பார்த்தேன்

27. கடிமனையைச் சென்றடைந்தான். இங்கு **கடி** என்ற உரிச்சொல் உணர்த்தும் பொருள்

1. காவல்
2. பெரிய
3. கொடிய
4. அழகிய

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்தொதி

1. கதவு, கடம், காகம், காலை
2. நண்டு, நஞ்சு, நாகை, நீதி
3. ஆக்கம், அச்சாணி, இலம்பாடு, இழப்பு
4. புயல், புரவலன், புலவர், புள்ளி

**∗ பொருத்தமற்ற சொற்தொகுதி இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க**

29.
1. வேற்றுமைத் தொகை : நீரெத்து, மீன் சந்தை, மாணவர் கல்வி
2. வினைத் தொகை : நடுமரம், எழுகதிர், நாடு நகர்
3. பண்புத் தொகை : செங்கால், தண்தேன், பழம்புத்தகம்
4. உவமைத் தொகை : கனிமொழி, பால்நிலா, கடற்கருணை

30.
1. முற்றுவினை : வந்தான், நடந்தான், உண்டவன்
2. எச்சவினை : ஓடிய, வந்த, படித்து
3. தன்வினை : கட்டினான், கொத்தான், உருண்டது.
4. பிறவினை : கட்டுவித்தான், கொடுப்பித்தான், உருட்டினான்

**∗ புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க**

31. நகரத்தின் மரதனோட்டப் போட்டியை சிறப்பாக நடத்துதற்கு தனியார் நிறுவனம் ………..……வழங்கியது

1. விளம்பரம்
2. பொறுப்பு
3. அனுசரனை
4. பணம்

32. நாட்டின் அபிவிருத்திக்காக ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்ட …………….. நிகழ்வு இடம்பெற்றது

1. அங்குரார்ப்பண
2. தொடக்க
3. கால்கோள்
4. நிர்மாண



kalvi.lk

33. நாட்டில் நீண்ட காலத்தின் பின்னர் ……………….. பத்மபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது

1. மருத்துவர்களுக்கு 2. மாணவர்களுக்கு 3.கலைஞர்களுக்கு 4. வியாபாரிகளுக்கு

34. நாட்டில் நிலவும் பொருளாதார சூழ்நிலை காரணமாக ஜனாதிபதி மத்திய வங்கி ………….. கலந்துரையாடினார்

1. தலைவருடன் 2. ஆளுநருடன் 3. மேலாளருடன் 4. அதிபருடன்

∗ வாக்கியங்களின் முற்பகுதிக்குப் **பொருத்தமான** முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க

35. சினிமா மொழி, மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்திற்கே ……………..

1. பொது 2. பொதுவானவை 3. பொதுவானது 4. பொதுமை

36. சென்னை சர்வகலாசாரையார் முதன் முதல் நடத்திய பி.ஏ. பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர் இருவர் இப்பரீட்சை எடுத்து ……………….

1. சித்தியெய்தியவர்கள் 2. சித்தியெய்தியவர்
3. சித்தியெய்தியமை 4. சித்தியெய்தியது

∗ கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாக் கொண்டு வினாக்ளுக்கு விடை தருக

காலமாம் கற்பகத்தில் தோன்றிமலர்ந்தே - இன்பம்
கமழும் மறுமலர்ச்சித் தேன்சொரிந்தே
ஞாலமீ திருபதாம் நூற்றாண்டில் - தமிழ் நாட்டிற்
புதுமை செய்த ஞானகவி
உள்ளத் துணர்ச்சி பொங்கப் பாடுங்கவிஞன் - உடல்
உதிரம் கொதித்துருகப் பாடுங்கவிஞன்
வெள்ளம்போற் பாயுமின்பப் பாட்டினிலே – வேக
வீரக் கனல்பறக்கப் பாடுங்கவிஞன்

37. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட விடயம்

1. மறுமலர்ச்சி பற்றியது 2. புரட்சிக் கவிஞன் பற்றியது
3. நவீன கவிதை பற்றியது 4. புதுமை விடயங்கள் பற்றியது

38. 'காலமாம் கற்பகம்' என்பது

1. தற்குறிப்பேற்ற அணி 2. உவமை அணி 3. உருவக அணி 4. சிலேடை அணி

39. இங்கு முன்னொட்டாக அமையும் சொல்

1. மறுமலர்ச்சி 2. நூற்றாண்டில் 3. ஞானகவி 4. வீரக்கனல்

40. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. செல்வக்கேசராய முதலியார், பாரதியார் ஆகியோரையும் சிலர் எடுத்துக் காட்டுவர்
ஆ. இச்சிறுகதை வரலாற்றில் வ.வே.சு. ஐயரே முதன்மையானவர்
இ. இக்கதையில் உருவக – உள்ளடக்கச் செல்வாக்கும் உண்டு
ஈ. தமிழ்ச் சிறுகதைக்கு ஒரு வரலாறு உண்டு
உ. குளத்தங்கரை அரசமரம் ஐயரின் பெருமைளை எடுத்துக் கூறும்

1. இ, ஆ, அ, உ, ஈ 2. ஆ, ஈ, அ, உ, இ
3. ஈ, ஆ, அ, உ, இ 4. ஈ, ஆ, அ, இ, உ (2 + 3 + 3 + 4 = 12 புள்ளிகள்)



kalvi.lk

**(01) எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

01. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக
புரப்பத் தவனிமே லெவர்க்கும்

02. பின்வரும் தொடரிலுள்ள எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக
ஏதிலார் ஆரத் தமர் பசிப்பூ

03. நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது. இதனை செய்வினை வாக்கியமாக எழுதுக

04. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் திருத்தமாக எழுதுக.
என்னம்மா நீங்கள் சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீங்கள்.

05. ''முன்பின் காணாத கேளாத கூட்டம் அது. அன்றி அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டியர் ஆறுமுகநாவலர் அவர்கள்''. இங்கு **நீக்கப்படக்கூடிய** சொல் எது

06. அங்கிருந்த அழகு மிக்க நீர்க்கரையில் உள்ளவர்கள் துணுக்குறவும். இங்கு 'அழகு மிக்க நீர்க்கரை' என்பது எவ்வகைத் தொடர்.

07. அழகு செய்து இன்பப் பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளன. இங்கு இடம்பெற்ற வழுவைச் சுட்டிக்காட்டி மீண்டும் திருத்தமாக எழுதுக.

08. விசுவநாதபிள்ளை நாவலரோடு வாதஞ் செய்தார்.
விசுவநாதபிள்ளை நாவலரைக் குருவாகக் கொண்டார்.
இவ் வாக்கியத்தை ஒரே வாக்கியமாக எழுதுக.

09. பாடலின் மையப்பொருளை ஆழமாகப் புலப்படுத்தினார். இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள் யாது.

10. ஏழைக்குச் செய்த தீங்கை அல்லா எள்ளளவும் ஏற்பான். இதனை எதிர்மறை வாக்கியமாக எழுதுக

(20 புள்ளிகள்)

**(02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து 250 - 300 சொற்களில் எழுதி பொருத்தமான தலைப்பும் இடுக.**

**01.** இன்று எமது பொருளாதாரத்தில் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. மன்னர் காலத்திலும் அன்னியர் ஆட்சிக் காலத்திலும் உயர் நிலையை அடைந்திருந்த இலங்யையின் உற்பத்தித் துறை மீண்டும் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. அத்துடன் உடலுக்குரிய போசனை, போதாமை எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இன்னொரு சவாலாவே அமைகின்றது. இதனை உள்ளூர் உற்பத்தியாலேயே ஈடுசெய்ய முடியும் எனக் கூறப்படுகின்றது. எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய **ஒரு விளக்கக் கட்டுரை** எழுதுக.


kalvi.lk

**02.** ஒரு நாட்டில் பல இனங்கள் பல மதங்கள் காணப்படினும் அனைத்தும் சுதந்திரம் நிறைந்ததாவே விளங்கும். அதுவே ஒரு ஜனநாயக நாடு எனப்படும். இனம், மதம், மொழி என்பன வேறுபாடாகக் காணப்பட்டாலும் ஒரு நாட்டிலுள்ளவர்கள் ஒற்றுமையாக வாழவேண்டியது அவசியமானதாகும். இதன்போது இனங்களின் ஒற்றுமையே தேசிய ஒற்றுமையாகின்றது. தேசிய ஒற்றுமையின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். நாட்டு மக்கள் மகிழ்வான வாழ்க்கை வாழ்வார்கள். எனவே ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பாடசாலையில் கொண்டாடப்பட்ட தேசிய பாதுகாப்புத்தின விழாவில் நீர் நிகழ்த்திய **மேடைப்பேச்சு**

**03.** கல்விக் கண்காட்சி, சுற்றுலா என்பன பாடசாலை மாணவரிடையே ஆளுமையை வளர்க்கும் களச்செயற்பாடுகளாகும். அண்மையில் நீர் கல்விச் சுற்றுலா சென்றபோது பல இடங்ளைப் பார்க்க முடிந்ததாயினும் நீர் சென்ற ஒரு பிரதேசம் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகும். அந்த இடம் இலங்கைத் தீவின் மக்கள் பலராலும் விரும்பப்பட்ட ஒன்றாகும். அந்த இடத்தின் கலை, கலாசாரம், வரலாற்றுத் தொன்மை, அந்நியர்களால் கவரப்பட்ட தன்மை முதலியனவற்றை எடுத்துக் கூறி **ஒரு விபரணக் கட்டுரை** எழுதுக.

**04.** தனது பாடசாலைக் காலத்தில், சிறுவயதிலிருந்து விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்டிருந்த நிசாம் கல்வியிலும் முன்னேற்றம் காட்டிவந்தான். ஆனாலும், கல்வியில் ஆர்வம் போதாதென பலராலும் சில குறைகள் அவனிடம் தெரிவிக்கப்பட்டன. விளையாட்டுத் துறையையே உயர்குறிக்கோளாகவும் கொண்டிருந்தான். விளையாட்டுக்களால் உடல் - உள வெற்றி ஏற்படும் என்பதையும் அறிந்திருந்தான். பரீட்சைப் பெறுபேறுகள் எல்லோருக்கும் போன்று அவனுக்கும் வெற்றியைப் கொடுத்தது, ஆனால், விளையாட்டுத் துறையால் அவன் பெற்ற பெறுபேறு ஏனையை மாணவர்களை விட அவன் வாழ்விலும் முன்னனேற்றமடைந்தான். என்ற கருத்துப் புலப்பட **ஒரு சிறுகதை** எழுதுக

(25 புள்ளிகள்)

***(03) பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு ஒரு சுருக்கம் எழுதுக. சுருக்கத்தின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கையகைக் குறிப்டுக.***

வடமொழி (சம்ஸ்கிருதம்) படித்தவர்களின் செல்வாக்கு வளர்ந்து, வட சொற்களின் கலப்பு மிகுதியான காரணத்தால் கன்னடமும், தெலுங்கும் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் மொழியிலிருந்து மிக வேறுபட்டுவிட்டன. மலையாளமும் தமிழும் அவ்வளவு மிகுதியாக வேறுபடவில்லை. கேரளத்தில் வடமொழியின் செல்வாக்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்புதான் மிகுதியாயிற்று. அதற்குமுன் தமிழ் அங்கே ஆட்சி மொழியாகவும் கலைமொழியாகவும் இருந்து வந்தது. பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் ஆண்டு வந்த சேர மன்னர்கள், தமிழரசர்கள். அதற்குப் பிறகு பாண்டிய அரச மரபைச் சார்ந்த தமிழ் அரசர்களே



kalvi.lk

“பெருமான்கள்“ “பெருமாக்கன்மார்“ என்ற பெயரோடு அங்கே பத்தாம் நூற்றாண்டுவரையில் ஆண்டுவந்தார்கள். பழைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரங்கேற்றப்பட்டபோது, கேரளத்தைச் சார்ந்த திருவிதாங்கூர்த் தமிழ்ப்புலவர் ஒருவர் தலைவராக இருந்தார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டுவரையில் கேரள நாட்டுப் புலவர்கள் பலர் தமிழில் பாடியுள்ளனர். அவர்களின் பாடல்கள் பழைய தமிழ்த் தொகை நூல்களாகிய புறநானூறு அகநானூறு முதலியவற்றில் உள்ளன. புறநானூற்றில் கேரள நாட்டு (சேர நாட்டு) அரசர்களைப்பற்றிய பாடல்கள் பல இருக்கின்றன: பதிற்றுப்பத்து என்னும் தொகை நூலின் நூறு பாடல்களும் சேர நாட்டு (கேரள நாட்டு) அரசர்களைப் புகழ்ந்து பாடி யவை. தமிழின் பழைய காவியமாகிய சிலப்பதிகாரம் கேரள நாட்டுத் தமிழ்ப் புலவர் இளங்கோ இயற்றியது. அந்தக் காப்பியத்தின் தலைவி கண்ணகிக்கு அந்த நாட்டில் திருவஞ்சைக்களத்தில் (திருவஞ்சிக்குளத்தில்) கோவில் கட்டப்பட்டது. கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார் நாயன்மார்களில் சேரமான் பெருமாள் நாயனாரும், குல சேகர ஆழ்வாரும் கேரள நாட்டைச் சார்ந்தவர்கள். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தமிழ் இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் கேரள நாட்டைச் சார்ந்தவர்,

(10 புள்ளிகள்)

**(04) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

சங்கத் தொகை நூல்கள் அனைத்திலேயும் இடம் பெற்றுள்ள ஒரே புலவர் கபிலராவார் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவை சங்க இலக்கிய நூல்களாகும். பத்துப்பாட்டு என்பது பத்துப் பாடல்களின் தொகுப்பாகும். இதிலே கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு இடம் பெற்றுள்ளது. எட்டுத்தொகை என்பது அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, பரிபாடல் ஆகிய எட்டுத் தொகை நூல்களைக் குறிக்கும். இவற்றில் பரிபாடல் தவிர மற்ற ஏழு தொகை நூல்களிலும் கபிலர் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பரிபாடலில் மட்டும்தான் இவரது பாடல்கள் இடம் பெறவில்லை. ஆனால் பரிபாடல் நமக்கு முழுமையாகக் கிடைக்க வில்லை. எழுபது பாடல்களைக் கொண்ட பரிபாடல் தொகுப்பில் இதுவரை இருபத்திரண்டு பாடல்கள் தான் கிடைத்துள்ளன. ஒரு வேளை பரிபாடல் முழுவதும் நமக்குக் கிடைத்திருந்தால் அதில் கபிலரின் பாடல்களும் இடம் பெற்றிருக்கும். எனவே சங்க இலக் கியத் தொகை நூல்கள் அனைத்திலேயும் இவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன என்றாகிறது.

வேறு எந்தப் புலவரின் பாடல்களும் இதுபோல் சங்க நூல்கள் அனைத்திலும் இடம் பெறவில்லை . பரணர், நக்கீரர், ஔவையார் போன்ற புலவர்களின் பாடல்கள் கூட இதுபோல் அனைத்து நூல் களிலும் இடம் பெறவில்லை. ஆகவே சங்க இலக்கியத் தொகை நூல்கள் அனைத்திலேயும் இடம் பெற்றுள்ள ஒரே புலவர் என்ற பெருமை



kalvi.lk

கபிலருக்கு மட்டுமே உண்டு. ஒரு சிலர் "பரிபாடலும் கலித்தொகையும் சங்ககால நூல்கள் அல்ல, என்று கூறுகின்றனர். வேறு சிலர் இவை சங்ககால நூல்கள் தான் என்று கூறுகின்றனர். இந்த ஆய்வு இன்னும் முடிவு பெறவில்லை. ஒருவேளை எதிர்காலத்தில் உறுதியான சான்றுகள் கிடைத்துப் பரிபாடலும் கலித்தொகையும் சங்ககால நூலகள் அல்ல என்ற உண்மை நிறுவப்படுகிறது என்று வைத்துக்கொள்ளலாம். அப்பொழுது இந்த இரண்டு தொகை நூல்கள் தவிர மற்ற நறுந்தொகை நூல்களும் பத்துப்பாட்டும் தான் சங்க கால நூலகள் என்றாகின்றன. இந்த ஆறு தொகை நூல்களிலும் பத்துப்பாட்டிலும் கபிலரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

1. சங்கத் தொகை நூல்கள் எவை
2. கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு எங்கே இடம் பெற்றுள்ளது.
3. கபிலருக்கு உள்ள பெருமை யாது
4. பரிபாடலில் கபிலரின் பாடல் இடம்பெறாமைக்கான காரணங்கள் எவை
5. எட்டுத்தொகை நூல்களுக்குள்ள விமர்சனம் யாது

(10 புள்ளிகள்)

**(05) பின்வரும் பகுதியை வாசித்து 100 சொற்களில் எழுதுக**

உமது பிரதேசத்தில் வெள்ளதத்தால் பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அம்மக்களது அடிப்படைத்தேவைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டதோடு அவர்களது தொழில், போக்குவரத்து, அவர்களது பிள்ளைளின் கல்வி என்பனவும் பாதிப்படைந்துள்ளன. எனவே மேற்குறித்த தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நலம்புரிச் சங்கச் செயலாளராக உம்மைக் கருதி பிரதேச செயலருக்குத் தெரிவிக்கும் வகையில் 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக

**அல்லது**

அண்மை காலத்தில் சிறுதானிங்களை வளர் க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அரசாங்கத்தால் பொதுமக்களுக்குப் பல தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிர் வளர்ப்பதற்குரிய விதைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டதோடு அவற்றின் முக்கியத்துவமும் எடுத்துக் கூறப்படுகின்றது. சிறுதானியங்களால் ஏற்படும் பயன்கள் குறித்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எனவே சிறுதானியம் வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தி 100 சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** தயாரிக்குக

(10 புள்ளிகள்)



kalvi.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...........................................................................

### பகுதி III

**கவனிக்க**

- ⊗ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ⊗ **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- ⊗ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்

(01)

*01.* கழித்து நீங்கிய தென்ன கள்ள வாசையை
யழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை

(அ) '**க**ள்ள வாசையை ஆழித்து' என்பது யாருடைய ஆசையை அழித்து

(ஆ) '**வேந்தரை**' எனக்குறிப்பிட்டது யாரை

*02.* 'நீர் நணிப்படிகோ டேறி சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர

(அ) '**நணி**' என்பது குறிக்கும் கருத்து யாது

(ஆ) '**திரையகம்**' என்றால் என்ன

*03.* உச்சி வெயிலில் ஏலேலோ உருகிறேனே ஐலசா
உள்ளம் மட்டும் ஏலேலோ உன்னிடம் ஐலசா

(அ) **உருகிறேனே** என்பதால் கூறப்பட்டவர் யார்

(ஆ) **உன்னிடம்** என்பதால் நீர் கருதுவது யாது

*04.* 'நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்றான்

(அ) 'நமக்கு'என்பதால் கூறப்பட்டோர் யார்

(ஆ) **கதி** என்றால் என்ன

*05.* அணிதேர் புரவி யாட் பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே

(அ) '**அணிதேர்** ' என்பதால் கூறப்படுவது யாது

(ஆ) மன்னர்க்கிருக்க என்பதைச் சந்தி பிரித்து எழுதுக

*06.* கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணில்லாதவர் போல திகழ்வார் காண்

(அ) **ஓர்ந்திடார்** என்பதன் கருத்து யாது

(ஆ) இங்கு இடம்பெற்ற உவமானம் யாது



kalvi.lk

07. வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
(அ) **வானரங்கள்** எனப்பட்டது எவற்றை
(ஆ) வான்கவிகள்' எனப்பட்டோர் யார்

08. எனக்கிந்தக் கதையை ஆயிரம் முறை சொன்னவர்கள் - கூட்டத்தை நேரிற் கண்ணாற் கண்டவர்களும், அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர்களும்
(அ) **எனக்**கு' என்பதால் கூறப்பட்டவர் யார்
(ஆ) கூட்டத்தோடு தொடர்புபட்டவர் யார்

09. இருவரும் அதைத் தள்ள முயற்சிக்கிறார்கள். இங்கே அந்தக் கார், அவர்களது மண வாழ்வின் குறியீடா அமைகின்றது
(அ) **இருவரும்** எனப்பட்டோர் யார்
(ஆ) இப்பகுதியை வெளிப்படுத்தும் திரைப்படம் யாது

10. கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு
(அ) '**நன்னூலாம் கடலினுண்டு**' என்பதன் பொருள் யாது
(ஆ) '**கால்**' என்றால் என்ன

(1 x 2 = 20 புள்ளிகள்)

(02) **பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

1. அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை
நோக்கி, ஐய வன்பின்
நிறைந்தாளை உரை என்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும்
தொழுகுலம் ஆம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தனைப்
பயந்தபொரியாள் என்றான்
(அ) தசரதனின் பெருமைகள் எனக்கூறப்பட்டவை யாவை
(ஆ) இலக்குமணனின் உயர்ந்த பண்பு யாது

2. மட்டுருக்காலை அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவி யிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளத் தகட்டினால் விரல்கட்டமிட்டு
வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வராமற் காரும் ஐயனாரே
(அ) அரிவாள் வர்ணிக்கப்பட்டுள்ள சிறப்பினைத் தருக
(ஆ) இப்பகுதியில் இடம்பெற்ற நாட்டார் அம்சங்கள் இரண்டினைத் தருக


kalvi.lk

3. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்தேன
நுகரா மண்டுகம்
வண்டோ கானகத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே

(அ) புல்லர் இயல்பு எத்தயைது
(ஆ) கற்றோரின் சிறப்பெனக் கூறப்பட்ட விடயம் யாது

4. அந்த நாட்களில் நல்லூர் கந்தசுவாமிக் கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. கோயிலாருக்கு ஏற்பாட்டாளராக பிறிற்றோ, பிராமணரை ஆதரிப்பவர் நாவலர் அவர்கள். அவர்களுக்கு யாழப்பாணத்தில் இருக்கும் செல்வாக்கைப் பிறிற்றோ அறிவார். நாவலர் அவர்கள் தமக்குச் சார்பாயிருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடாத்தி வைப்பார் என்று தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்கு தெரிவித்துத் தாமே நேரிற் சில கடிதங்களில் - தந்திகளில் - ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார் போலும்.

(அ) பாரிய வழக்கு என்பதால் கூறப்பட்ட விடயம் யாது
(ஆ) ஒருவாறு குறிப்பிட்டுமிருந்தார் என்பது எதனை

5. நான் இரண்டு தரம் வாயைத் திறந்து திறந்து மூடினேன். காற்றுத்தான் வந்தது. "விட்டிர்ராதே! விட்டிர்ராதே! பிடி" என்று கத்தினேன். ஏதோ கன்றுக்குட்டி ஒன்று அறுத்துக்கொண்டு ஓடுகிறது போலவும் 'தும்பைப் பிடி' என்று நான் கத்துகிறது போலவும் அது இருந்தது. என்னுடைய மகன் குவளை மலர் போன்ற கருநீலக் கண்களை இன்னும் அகல விரித்து என்னைப் பார்த்தான். அவனுடைய கை மௌஸை அழுத்திப் பிடித்தபடியே இருந்தது. நான் பாய்ந்து கிட்டப்போய் விட்டேன்

(அ) அவர் கத்தியது எவ்வாறு இருந்தது
(ஆ) மகனது அசைவற்ற நிலை எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது

(1 x 4 = 20 புள்ளிகள்)

**(03) கம்பியூட்டர் என்ற சிறுகதையில்**

(அ) கம்பியூட்டரால் கதைசொல்லி அடைந்த பயனும்
(ஆ) கதை தொலைந்ததால் கதை சொல்லியிடத்தே ஏற்றபட்ட மாறுபாடும்
வெளிப்படும் வகையினை வெளிப்படுத்துக

அல்லது

**இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்**

(அ) அருச்சுனன்
(ஆ) தருமபுத்திரர்
ஆகிய மகாபாரதப் பாத்திரங்களின் இலட்சிய வாழ்வினைத் தெளிவுபடுத்து

(15 புள்ளிகள்)



kalvi.lk

**(04) குகப்படலத்தில் இராமன் பிரிவால்**

(அ) கோசலை, சுமித்திரை ஆகியோர் அடைந்த துயரும்

(ஆ) பரதன் அடைந்த துயரும்

வெளிப்படும் வகையினை விளக்குக

**அல்லது**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில்**

(அ) மலைவளச் சிறப்பும்

(ஆ) அதனை வெளிப்படுத்தக் கையாண்ட அணிப்பயன்பாடும்

இடம்பெற்றுள்ள வயினை ஆதாரங்ளுடன் விளக்குக

(15 புள்ளிகள்)

**(05) எதுநல்ல சினிமா என்ற கட்டுரையில்**

(அ) ஒலி

(ஆ) படத்தொகுப்பு

சித்திரிக்கப்பட்டுள்ளன விதத்தினைத் தெளிவுபடுத்துக

**(06) பேதைமையில்**

(அ) பேதை அடையும் துயரும்

(ஆ) உமையணிப் பயன்பாடும்

இடம்பெற்றுள்ள வகையினை விளக்குக

**(07) சங்கப்பாடலின் புறநானூற்றில்**

(அ) இளமைக் காலத்து நினைவுகளும்

(ஆ) முதியவர் என்பதற்கான சான்றுகளும்

வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page